செ.வெ.எண்: 706/2016 நாள்: 07.10.2016

# பத்திரிக்கைசெய்தி

பொது விநியோகத்திட்ட செயல்பாட்டில் காணப்படும் குறைபாடுகளை களைவதற்கும், மக்களின் குறைகளை கேட்டு உடனுக்குடன் அவற்றை நிவர்த்தி செய்வதற்கும், சிறப்பு முகாம்கள் 08.10.2016 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நான்கு வட்டங்களில் கீழ்கண்டவாறு நடைபெற உள்ளது.

அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் இராஜாக்கமங்கலம் துறை பகுதிக்கு இராஜாக்கமங்கலம் ஊராட்சி அலுவலகத்திலும், தோவாளை வட்டத்தில் செண்பகராமன்புதூர் பகுதிக்கு செண்பகராமன்புதூர் ஊராட்சி அலுவலகத்திலும், கல்குளம் வட்டத்தில் அழகியமண்டபம் பகுதிக்கு விலவூர் பேரூராட்சி அலுவலகத்திலும், விளவங்கோடு வட்டத்திற்கு தேங்காய்பட்டணம் பகுதிக்கு தேங்காய்பட்டணம் ஊராட்சி அலுவலகத்திலும் வட்டவழங்கல் அலுவலர் தலைமையில் மக்கள் குறைதீர் முகாம் 08.10.2016 அன்று காலை 10.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை நடைபெறவுள்ளது.

பொதுமக்கள் பொதுவிநியோகத்திட்ட செயல்பாட்டில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், குடும்ப அட்டையில் பெயர் நீக்கல், சேர்த்தல், பெயர் திருத்தங்கள், முகவரி மாற்றம் மற்றும் குடும்ப அட்டையில் திருத்தம் செய்வதற்கும் மனுக்களை பொதுமக்கள் அளித்து தீர்வுகாணலாம் எனவும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துக்கொள்கிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரிமாவட்டம்.
(இ) நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.